முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.2.2026) சென்னையில் நடைபெற்ற, பாலு திருமதி ராஜஸ்ரீ தம்பதியரின் மகன் யோகேஷ் நர்மதா ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி, மணமக்களை வாழ்த்தினார். உடன், சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, ஜெ. கருணாநிதி, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் பூச்சி முருகன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் டி.கே.எஸ். இளங்கோவன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக் குழு தலைவர் நே. சிற்றரசு, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எஸ். ஆஸ்டின், ஆயிரம் விளக்கு பகுதி கழக செயலாளர் மா.பா. அன்பு துரை மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

40 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்நாட்டில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை –

நீண்ட கால விசா வழங்குதல் உள்ளிட்ட - மனிதாபிமான அடிப்படையிலான நிரந்தரத் தீர்வு காணுவீர்!

இந்தியப் பிரதமருக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

சென்னை, பிப்.16-

40 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் நாட்டில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்குதல் நீண்ட கால விசா வழங்குதல் உள்ளிட்ட நிலையான மற்றும் மனிதாபிமான அடிப்படையிலான நிரந்தர தீர்வு காண வேண்டும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்அவர்கள், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு நேற்று (15.2.2026) எழுதியுள்ள கடிதத்தில், கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியாவில், குறிப்பாக தமிழ் நாட்டில், வசித்துவரும் இலங்கைத் தமிழர்கள் தொடர்பான மனிதாபிமான, அரசியலமைப்பு மற்றும் நாட்டு நலனுக்கு முக்கியத்துவம் வாய்ந்த விவகாரம் குறித்து இக்கடிதத்தை எழுதுவதாக குறிப்பிட்டுள்ளார்.

1983ஆம் ஆண்டு முதல், இலங்கையில் ஏற்பட்ட இனமோதல்களால் தங்கள் உயிரை காப்பாற்றிக் கொள்ள தங்கள் சொந்த மண்ணிலிருந்து வெளியேறிய இலங்கைத் தமிழர்களுக்கு, ஒன்றிய அரசின் ஆதரவு மற்றும் ஒப்புதலுடன், தமிழ் நாடு அரசு தங்குமிடம், வாழ்வாதார உதவி, கல்வி மற்றும் மருத்துவ வசதிகளைத் தொடர்ந்து வழங்கி வருவதாகவும் தற்பொழுது, சுமார் 89,000 நபர்கள் தமிழ் நாட்டில் வசித்து வருகின்றனர் என்றும், இவர்களில் கணிசமானோர் 30 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியாவில் வசிப்பவர்கள் என்றும், அதிலும் சுமார் 40 சதவீதத்தினர் இந்திய மண்ணிலேயே பிறந்தவர்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மனிதாபிமானப் பொறுப்புகள்!

தமிழ்நாடு அரசு தனது மனிதாபிமானப் பொறுப்புகளை சிறப்பாக நிறைவேற்றி வந்தாலும், இலங்கைத் தமிழர்கள் நீண்டகாலமாக சட்டரீதியான நிச்சயமற்ற நிலையிலேயே வாழ்ந்து வருவதாகவும், பல ஆண்டுகளாக தமிழ்நாட்டில், சமூகத்துடன் ஒன்றிணைந்து வாழ்ந்துவரும் போதிலும், குடியுரிமை அல்லது நீண்டகால விசா போன்ற நிலையான சட்டப்பூர்வமான தீர்வுகள் தற்போதுவரை இவர்களுக்குக் கிடைக்கவில்லை என்றும் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில், வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் தலைமையில், தமிழ்நாடு அரசு ஆலோசனைக் குழுவினை அமைத்து, இலங்கைத் தமிழர்களின் நிலை குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டு வழங்கிய முக்கியப் பரிந்துரைகள் குறித்து அளித்துள்ள விவரங்கள் குறித்து கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில், இவ்வாலோசனைக் குழு அளித்த பரிந்துரைகளின்படி, 30.06.1987க்கு முன்னதாக இந்தியாவில் பிறந்தவர்கள், தாய் அல்லது தந்தை இந்தியாவை சார்ந்தவர்கள், இந்தியரை திருமணம் செய்தவர்கள், இந்திய வம்சாவளி பின்னணியை உடையவர்கள் (அதற்கான சான்றாவணங்களை கொண்ட நபர்கள்) மற்றும் நீண்டகால விசா பெறத் தகுதியுள்ளவர்கள் எனப் பல பிரிவுகளைச் சேர்ந்த இலங்கைத் தமிழர்கள் தற்போதுள்ள சட்ட விதிகளின் கீழ் முறைப்படுத்தப்படவும், அவர்களுக்கான குடியுரிமை வாய்ப்புகளை பெறுவதற்கும் தகுதியுடையவர்களாக உள்ளனர் என்றும்,

2003ஆம் ஆண்டு ஒன்றிய அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட குடியுரிமை திருத்த சட்டமானது "சட்டவிரோதமாகக் குடியேறியவர்" என்ற வகையை அறிமுகப்படுத்தியது. இந்த திருத்தமானது தங்களது உயிரை பாதுகாக்கும் நோக்கத்தோடு, ஒன்றிய மற்றும் தமிழ்நாடு அரசினால் பாதுகாப்போடும், மாண்போடும் நடத்தப்படக்கூடிய தமிழ் சொந்தங்களுக்கு எதிர்பாராத, எதிர்மறையான பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது என்றும்,

நீண்டகாலத் தீர்வுகளுக்குத் தடைகள்!

1986ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட நிர்வாக அறிவுறுத்தல்கள், நமது பராமரிப்பிலும், பாதுகாப்பிலும் வசித்து வரும் இலங்கைவாழ் தமிழர்களிடம் இருந்து பெறப்படும் குடியுரிமை விண்ணப்பங்களை பரிசீலிப்பதில் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தியுள்ளதோடு, தமிழ்ச் சொந்தங்களுக்கு சட்ட ரீதியான நீண்ட கால தீர்வுகளுக்கு தடையாகவே உள்ளதாகவும், சமீபத்திய ஒன்றிய அரசின் கொள்கை முன்னேற்றங்கள், குறிப்பாக குடிவரவு மற்றும் வெளிநாட்டினர் (விலக்கு) ஆணை, 2025 (Immigration and Foreigners (Exemption) Order, 2025) ஆக்கபூர்வமான மற்றும் மனிதாபிமான நோக்கத்துடன் கூடிய அணுகுமுறையை வெளிப்படுத்துகின்றன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாணையின் அடிப்படையில் ஜனவரி 9, 2015 வரை இந்தியாவில் தஞ்சமடைந்த இலங்கைத் தமிழர்களை "சட்டவிரோதமாகக் குடியேறியவர்களாகக்" கருதக் கூடாது என்ற முறையான விளக்கம் ஒன்றிய அரசால் வழங்கப்படவேண்டும் என்றும், இவ்விளக்கம் மிகவும் தேவையான சட்டப்பூர்வத் தெளிவை வழங்குவதோடு இலங்கைவாழ் தமிழர்களின் நீண்ட கால சட்டத் தீர்வை உறுதிப்படுத்தும் என்றும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், பி. உலகநாதன் மற்றும் ஒன்றிய அரசு (2019) இடையிலான வழக்கில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு உட்பட பல்வேறு நீதிமன்ற தீர்ப்புகள், இத்தகைய வழக்குகளில் சட்டத்தை தற்போதுள்ள சூழலுக்கு ஏற்ற சாத்தியமான மற்றும் மனிதாபிமான கண்ணோட்டத்துடன் அணுக வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அதன் அடிப்படையில், ஒன்றிய அரசு இத்துடன் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளை பரிசீலித்து உடனடியாக செயல்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்,

• இலங்கைத் தமிழர்களின் குடியுரிமை விண்ணப்பங்களை பரிசீலிக்கத் தடையாக உள்ள முந்தைய நிர்வாக உத்தரவை இரத்து செய்திடவேண்டும் என்றும்,

• தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு, சரிபார்க்கப்பட்ட அடையாள ஆவணங்களின் அடிப்படையில், குடியுரிமை அல்லது நீண்டகால விசா விண்ணப்பங்களுக்கு இலங்கைத் தமிழர்கள் விண்ணப்பிக்கும்போது, தற்போதைய நடைமுறையில் கடவுச்சீட்டு மற்றும் விசா தேவைகளை தள்ளுபடி செய்யும் நிர்வாக விளக்கத்தை வழங்க வேண்டும் என்றும்,

• மாவட்ட அளவில் உள்ள அலுவலர்களுக்கு (மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல் கண்காணிப்பாளர்) குடியுரிமை மற்றும் நீண்ட கால விசா விண்ணப்பங்களை விரைவாக பரிசீலித்து நடவடிக்கை எடுப்பதற்கான உரிய அதிகாரங்களை வழங்க வேண்டும் என்றும்,

• 9.1.2015 வரை இந்தியாவில் வசித்து வரும் இலங்கைத் தமிழர்களை "சட்டவிரோதமாகக் குடியேறியவர்களாகக்" கருதக் கூடாது என்ற விளக்கத்தை அதிகாரப் பூர்வமாக அறிவிக்க வேண்டும் என்றும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியாவில் மரியாதையுடனும், ஒழுக்கத்துடனும், ஆழ்ந்த பண்பாட்டு உறவுகளுடனும் வாழ்ந்து வரும் இலங்கை தமிழர்கள், ஒன்றிய அரசின் ஒருங்கிணைப்புடன் ஆதரிக்கப்பட்டு, ஒழுங்குபடுத்தப்பட்ட ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிர்வாக செயல்பாடுகள் மூலம் பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றார்கள் என்றும், அவர்களின் நிலையை தொடர்ந்து "சட்டவிரோதம்" என வரையறுப்பது, அவர்கள் இந்தியாவிற்கு வந்த மனிதாபிமானச் சூழலையோ அல்லது அரசின் அனுமதியுடன் தங்கியிருப்பதையோ, பண்பாட்டு மதிப்பீடுகளையோ பிரதிபலிக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேற்குறிப்பிட்ட கருத்துகள்மீது விரைவான, மனிதாபிமான அடிப்படையிலான நல்ல முடிவினை எடுப்பீர்கள் என தாம் நம்புவதாகவும், இந்தியப் பிரதமர் அவர்களுக்கு, முதலமைச்சர் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 6 தொகுதிகளில் நிறைவேற்றப்பட வேண்டிய முக்கிய திட்டங்கள் குறித்து மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் கழகத்தினர் கோரிக்கை மனுக்களை தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினரிடம் அளித்தனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.2.2026) சென்னையில், இந்து சமய அறநிலையத் துறை சார்பில் நடைபெற்ற அனைத்துலக வள்ளலார் மாநாடு 2026யை தொடங்கிவைத்து, திருவொற்றியூர் நெடுஞ்சாலைக்கு "வள்ளலார் நெடுஞ்சாலை" என பெயர் சூட்டி, அதற்கான பெயர் பலகையை திறந்து வைத்தார். இம்மாநாட்டில், அமைச்சர்கள் எ.வ.வேலு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.கே. மோகன், தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், ஆர்.டி.சேகர், ஐட்ரீம் மூர்த்தி, இந்து குமும நிறுவனத்தின் இயக்குநர் என்.ராம், கோவை குமரகுரு கல்வி நிறுவனங்கள் தலைவர் டாக்டர் பி.கே. கிருஷ்ணராஜ் வானவராயர், வடலூர் தலைமை சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத் தலைவர் டாக்டர் அருள் நாகலிங்கம், பொதுச் செயலாளர் டாக்டர் கி. வெற்றிவேல், வள்ளலார் சன்மார்க்கிகள் ஆதி மகாசாது சுவாமி பத்மேந்திரா, சண்முக மூர்த்தி லெட்சுமணன், இராம பாண்டுரங்கன், டாக்டர் செல்வ மாதரசி, அறிவழகன், செல்வகுமார், வள்ளலார் அமைப்புகளின் நிருவாகிகள், இந்து சமய அறநிலையத்துறை ஆலோசனைக் குழு உறுப்பினர் சுகி சிவம், நே. சிற்றரசு, ப. ரங்கநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

5 வணிகவரி அலுவலகக் கட்டிடங்கள் – 12 சார்பதிவாளர் அலுவலகக் கட்டிடங்கள்!

பொங்கலூர் - வண்டலூர் - வாணாபுரம் புதிய சார் பதிவாளர் அலுவலகங்கள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி வாயிலாக திறந்து வைத்தார்!

சென்னை, பிப்.16-

வணிகவரி துறை சார்பில் ரூ.34.98 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 5 வணிக வரி அலுவலகக் கட்டடங்கள், பதிவுத் துறை சார்பில் ரூ.22.12 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 12 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் திருப்பூர் பதிவு மாவட்டத்தில் பொங்கலூர், தாம்பரம் பதிவு மாவட்டத்தில் வண்டலூர் மற்றும் கள்ளக்குறிச்சி பதிவு மாவட்டத்தில் வாணாபுரம் ஆகிய மூன்று புதிய சார்பதிவாளர் அலுவலகங்கள் ஆகியவற்றை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 13.02.2026 அன்று தலைமைச் செயலகத்தில், வணிகவரி மற்றும் பதிவுத் துறை சார்பில் 57 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 வணிகவரி அலுவலகக் கட்டடங்கள், 12 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் திருப்பூர் பதிவு மாவட்டத்தில் பொங்கலூர், தாம்பரம் பதிவு மாவட்டத்தில் வண்டலூர், கள்ளக்குறிச்சி பதிவு மாவட்டத்தில் வாணாபுரம் ஆகிய புதிதாக உருவாக்கப்பட்ட மூன்று புதிய சார்பதிவாளர் அலுவலகங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

மாநிலத்தின் வரி வருவாயில் மூன்றில் இரண்டு பங்குக்கு மேல் பங்களிக்கும் முக்கிய துறையாக வணிகவரித்துறை விளங்கி வருவதோடு, வரி வசூல் மற்றும் வரி நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனையும் உறுதி செய்து வருகிறது. மேலும், பதிவுத்துறை வாயிலாக மக்கள் தங்கள் சொத்துக்களின் மீதான உரிமையை தமது பெயரில் பதிவு செய்தல், திருமணத்தைப் பதிவு செய்தல், சங்கங்கள், சீட்டுகள் மற்றும் கூட்டாண்மை நிறுவனங்கள் பதிவு செய்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயல்பாடுகளை மேலும் மேம்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

5 வணிகவரி அலுவலகக் கட்டடங்களை திறந்து வைத்தல்

வணிகவரித் துறை சார்பில் திருச்சிராப்பள்ளி ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடம், அருப்புக்கோட்டையில் உதவி ஆணையர் அலுவலகக் கட்டடம், மன்னார்குடி, நாகப்பட்டினம் மற்றும் கரூர்-4 ஆகிய இடங்களில் மாநிலவரி அலுவலர் அலுவலகக் கட்டடங்கள் என மொத்தம் 34 கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 வணிகவரித் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

12 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்களை திறந்து வைத்தல்

வணிகவரி மற்றும் பதிவுத்துறை மானியக் கோரிக்கையில் புதிய சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க தஞ்சாவூர் மாவட்டம் - சுவாமிமலை மற்றும் பாபநாசம், திருவாரூர் மாவட்டம் - நன்னிலம் மற்றும் நீடாமங்கலம், நாமக்கல் மாவட்டம் - நாமக்கல் 2 எண் இணை சார்பதிவாளர் அலுவலகம், இராசிபுரம் மற்றும் நாமகிரிப்பேட்டை, திண்டுக்கல் மாவட்டம் - நிலக்கோட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டம் - எலவனாசூர்கோட்டை, தூத்துக்குடி மாவட்டம் - முறப்பநாடு தென்காசி மாவட்டம் - பண்மொழி, மயிலாடுதுறை மாவட்டம் - சீர்காழி ஆகிய இடங்களில் 22 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 12 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

முதலமைச்சர் அவர்கள் மொத்தம் 57 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வணிகவரி மற்றும் பதிவுத் துறைக்கான புதிய கட்டடங்களை திறந்து வைத்தார்.

வண்டலூர், வாணாபுரம் மற்றும் பொங்கலூர் ஆகிய இடங்களில் புதிதாக உருவாக்கப்பட்ட மூன்று சார்பதிவாளர் அலுவலகங்களை திறந்து வைத்தல்

2024-2025-ஆம் ஆண்டிற்கான வணிகவரி மற்றும் பதிவுத்துறை மானியக் கோரிக்கையின் அறிவிப்பை தொடர்ந்து, தாம்பரம் பதிவு மாவட்டம், கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ள 40 கிராமங்களில் 18 கிராமங்களை பிரித்து அந்த 18 கிராமங்களை உள்ளடக்கி தாம்பரம் பதிவு மாவட்டத்தில் புதியதாக உருவாக்கப்பட்ட வண்டலூர் சார்பதிவாளர் அலுவலகம்;

2025-2026 ஆம் ஆண்டிற்கான வணிகவரி மற்றும் பதிவுத்துறை மானியக் கோரிக்கையின் அறிவிப்பை தொடர்ந்து, கள்ளக்குறிச்சி வருவாய் மாவட்டம், வாணாபுரம் வருவாய் வட்டத்தில் உள்ள 85 கிராமங்களில் 32 கிராமங்களை பிரித்து அந்த 32 கிராமங்களை உள்ளடக்கி கள்ளக்குறிச்சி பதிவு மாவட்டத்தில் புதியதாக உருவாக்கப்பட்ட வாணாபுரம் சார்பதிவாளர் அலுவலகம்;

திருப்பூர் பதிவு மாவட்டம், பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ள 39 கிராமங்களில் 11 கிராமங்களை பிரித்து அந்த 11 கிராமங்களை உள்ளடக்கி திருப்பூர் பதிவு மாவட்டத்தில் புதியதாக உருவாக்கப்பட்ட பொங்கலூர் சார்பதிவாளர் அலுவலகம்;

ஆகிய புதிதாக உருவாக்கப்பட்ட மூன்று சார்பதிவாளர் அலுவலகங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். இப்புதிய சார்பதிவாளர் அலுவலகங்கள் திறக்கப்படுவதன் மூலம் பொதுமக்களுக்கு விரைவான மற்றும் சிறப்பான சேவைகளை அளிக்க இயலும்.

இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், வணிகவரி ஆணையர் எஸ். நாகராஜன், பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், ஆகியோர் கலந்து கொண்டனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துரை வழங்குகிறார்!

அரசு வழக்குரைஞர் தி.கேசவன் மகள் சபரிகேசவன் - ம.மகேஸ்வரன் திருமண வரவேற்பு விழா!

தலைமை : அமைச்சர் தா.மோ.அன்பரசன்! வரவேற்புரை : அமைச்சர் மா.சுப்பிரமணியன்!

சென்னை, பிப்.16-

சென்னை, நங்கநல்லூர் பி.வி.நகரில் வசிப்பவரும், காஞ்சிபுரம் மாவட்ட மாணவர் அணி முன்னாள் அமைப்பாளரும், ஆலந்தூர் சார்பு நீதிமன்ற கூடுதல் அரசு வழக்குரைஞர் தி.கேசவன் (எ) தி.எழிலரசு - கே.அமுதா ஆகியோரின் மகள் சபரி கேசவன் மற்றும் தேனி மாவட்டம், என்.டி.பட்டியில் வசிக்கும் எம்.மணிகண்டன் - எம்.முருகேஸ்வரி ஆகியோரின் மகன் எம்.மகேஸ்வரன் ஆகியோரின் திருமண வரவேற்பு விழா வருகிற 22-2-2026 ஞாயிற்றுக்கிழமை நன்று மாலை 6 மணியளவில் கோவிலமபக்கம், ஈச்சங்காடு, ஸ்ரீ ராணி மகாலில் தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன் மாண்புமிகு குறு-சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சரும்- காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளருமான தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற உள்ளது.

இத்திருமண வரவேற்பு விழாவில் துணை முதலமைச்சரும் - கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகிறார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரும் - சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளருமான மா.சுப்பிரமணியன் வரவேற்புரையாற்றுகிறார்.

இவ்விழாவில் சோழிங்க நல்லூர் மத்திய பகுதி கழக செயலாளர் எஸ்.அரவிந்த்ர மேஷ் எம்.எல்.ஏ., பகுதி கழக செயலாளர் என்.சந்திரன், ப.குணாளன், இரா.துரை ராஜ், எம்.கிருஷ்ணமூர்த்தி, ஒன்றிய கழக செயலாளர்கள் ஜி.வெங்கடேசன், ஜி.கே.ரவி (எ) விவேகானந்தன், நகர கழக செயலாளர் டி.பாபு, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி. பிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மேலும் இத்திருமண வரவேற்பு விழாவில் கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, எம்.பி., கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக தீர்மானக் குழு செயலாளர் மீ.அ.வைத்தியலிங்கம், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சுகவனம், திரு.வி.க நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, சென்னை மாநகராட்சி மேயர் பிரியாராஜன், துணை மேயர் மு.மகேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் காரம்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, ஐட்ரீம் மூர்த்தி, க.சுந்தர், எஸ்.ஆர்.ராஜா, தங்க.தமிழ்ச்செல்வன் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் கம்பம் ராமகிருஷ்ணன், இ.கருணாநிதி, சி.வி.எம்.பி.எழிலரசன், கே.எஸ்.சரவணகுமார், அண்ணாநகர் எம்.கே.மோகன், ஜெ.எம்.எச்.அசன் மவுலானா உள்ளிட்ட மாநில, மாவட்ட, தலைமைச் செயற்குழு, பொதுக்குழு, ஊராட்சி மன்ற தலைவர்கள், ஒன்றிய, பகுதி செயலாளர்கள் மற்றும் மாவட்ட அளவிலான அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளிட்ட தி.மு.கழகத்தினர், உற்றார் உறவினர்கள், நண்பர்கள் பங்கேற்றுச் சிறப்பிக்கின்றனர்.

இறுதியாக மணமகளின் சிறிய தந்தை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர் தி.அருள்பிரகாசம் நன்றி நவில்கிறார்.

சேப்பாக்கத்தில் அமைந்துள்ள பைத்துல் மால் மூலமாக அதனுடைய நிறுவனர் ஒய். ஜெய்ரூதின் அகமத் தலைமையில் ரம்ஜானை முன்னிட்டு தையல், இயந்திரங்கள், புடவைகள், அரிசி மூட்டைகள், வீட்டிற்கான மளிகை பொருட்கள் வழங்கிய நிகழ்ச்சியில் காங்கிரஸ் மூத்த தலைவர் எஸ்.எம்.இதயத்துல்லா சென்னை மேற்கு மாவட்ட சிறுபான்மை நல உரிமை பிரிவு அமைப்பாளர் எஸ் எச்.ரஹமத்துல்லா நலத்திட்ட உதவிகளை வழங்கிய விழாவில் பைத்துல் மால், தலைவர் அப்துல் ரஹீம் பட்டேல், செயலாளர் சாஜான் வாசிம், NGK மக்புல் வழக்கறிஞர் களைசா கலந்து கொண்டு சிறப்பித்தனர்.